2008 ஏப்ரல் 10] [திரு. தங்கம் தென்னரசு]

தெரியாமல் அவர்கள் மாட்டுகிறார்கள். இந்த அரசாங்கம் என்ன செய்யமுடியும்? DIET மூலமாக எல்லா DIET-லும் எது, எது என்று கொடுத்திருக்கிறோம். பத்திரிகைகளிலும் எது, எதெல்லாம் அங்கீகாரம் பெறாத பள்ளிகள் என்று பட்டியல் கொடுத்திருக்கிறோம்; சேராதீர்கள் என்று சொல்லி இருக்கிறோம். DIET-ல் போட்டிருக்கிறோம். C.E.O. Office-ல் list வைத்திருக்கிறோம். ஆனால், ஆங்காங்கே இருக்கக்கூடிய சில அப்பாவிகள் ஏமாந்து, இதில் சேர்ந்து விடுகிறார்கள். சேர்ந்துவிட்ட அவர்களையே பகடைக் காய்களாக வைத்துக்கொண்டு சில சுய நிதித் தனியார் பள்ளிகள், இங்கு குறிப்பிட்டிருக்கக்கூடிய பல்வேறு பள்ளிகள், இவர்களை முன்நிறுத்திக்கொண்டு இந்த claim-ஐச் செய்கிறார்கள். "அப்படித்தான் சொல்வார்கள், கடைசி நேரத்தில் வாங்கிக்கொள்ளலாம்" என்று சொல்வார்கள். ஒவ்வொரு முறையும் நாம் இதை அனுமதித்துக்கொண்டே போனால், இதற்கு ஒரு முற்றுப்புள்ளியை வைக்க முடியாது. ஒரு பக்கத்தில் கல்வி நிறுவனங்களை--இவர்களெல்லாம் யார்? ஒரு பயிற்சி நிறுவனம் என்று ஒரு ஓலைக் கொட்டகையில் இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் எல்லாம் நம்முடைய அங்கீகாரம் இல்லாமல், எங்கேயோ ஒரு இடத்தில் அங்கீகாரம் வாங்கிக்கொண்டு வந்து, நாம் அவ்வாறு பண்ணினோம் என்றால், இவர்கள், பிற்காலத்தில் வரக்கூடிய மாணவர்களுக்குச் சொல்லித் தரக்கூடிய ஆசிரியர்களாக உருவாகிக்கொண்டு போனால், இது வருங்காலச் சந்ததியினருக்கு நாம் செய்யக்கூடிய பெரிய தவறாகக்கூட அமைந்துவிடும். எனவே, அரசு எச்சரிக்கையாக இருக்கிறது. இதிலே மனிதாபிமான முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நீங்கள் சொல்லக்கூடிய கருத்தை--மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் மணி அவர்கள்கூட பல முறை இங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்; நீதிமன்றத்திலேகூட இப்படி ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது; இருந்தாலும், இது குறித்த முடிவினை--மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் எடுத்துச் சென்று, அதற்குப் பிறகு கலந்து ஒரு முடிவினை மேற்கொள்ள முடியும்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

*__திரு. கரி. இராமசாமி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தாறு முதல் தொண்ணூற்றொன்று வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-05

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் எண்பதாவது முதல் எண்பத்து மூன்றாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், குழுவின் தலைவர்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் மூன்றாவது முதல் ஆறாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நகராட்சிக் காவல் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிக் காவல் (நீக்கச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.